**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 155** **நாள்: 02.11.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையால் தேங்கிய மழைநீர் விரைந்து அகற்றப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழையினால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரில் கடந்த இரண்டு நாட்களில் தோராயமாக 44.48 மி.மீ. அளவு கனமழை பதிவாகி உள்ளது. இந்த கனமழையினால் மழைநீர் தேங்கிய 213 இடங்களில் 101 இடங்களில் உடனடியாக அகற்றப்பட்டது. மீதமுள்ள இடங்களில் மழைநீர் அகற்றும் பணி இடைவிடாது நடைபெற்று வருகிறது. இதுவரை மழையின் காரணமாக விழுந்த 37 மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் வழிவகை செய்யப்பட்டது. மேலும், 60 இடங்களில் மோட்டார் பம்புகள் மூலம் மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன.

மழைநீர் வடிகால்வாய் இல்லாத இடங்களில் 51 ஜே.சி.பி. இயந்திரங்களை கொண்டு மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன. ஆங்காங்கே தேங்கி நிற்கும் குப்பைகளும், கால்வாய் அடைப்புகளும் அகற்றப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 845 பணியாளர்கள் இரவு பகல் பாராமல் பணியாற்றி வருகிறார்கள் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**